செய்தி வெளியீடு எண்.45-2017 நாள்: 14.10.2017

# விழுப்புரம் மாவட்டம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பாக, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

*****

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பாக, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தலைமையில் இன்று (14.10.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தாவது:

விழுப்புரம் மாவட்டத்தில் குடிநீர் பிரச்சனை ஏற்படாத வண்ணம் துரித நடவடிக்கை எடுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசின் தற்போதைய சவாலாக இருப்பது டெங்கு காய்ச்சல் மட்டுமே. அரசு சுகாதாரத்துறை அறிக்கையின்படி, விழுப்பரம் மாவட்டத்தில் ஒருவர்கூட டெங்கு காய்ச்சலால் இறக்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இன்றைய தினம் வரை 12 நபர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனையிலும், 15 நபர்கள் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் ஏற்பட்டு, உள்நோயாளியாக யாரேனும் சிகிச்சை பெற்று வந்தால், அதனை உடனுக்குடன் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

காய்ச்சல் பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளின் பட்டியலை தனியார் மருத்துவர்கள் உடனுக்குடன் அரசுக்கு அளிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டெங்கு காய்ச்சல் தடுக்க விழுப்புரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், சுகாதாரத்துறை மட்டுமல்லாமல், அனைத்துத்துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே டெங்கு காய்ச்சலை முற்றிலுமாக ஒழிக்க முடியும்.

டெங்கு நோயால் இறப்பு ஏற்படுவதற்கான காரணம் போஸ்ட் டெங்கு சின்ரோம் என்பதேயாகும். கடந்த ஆண்டு டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் காய்ச்சல் ஏற்படும் போது இறப்பு ஏற்படுகிறது. எனவே, வீடுவீடாக சென்று விழிப்புணர்வு

ஏற்படுத்தும்போது, பொதுமக்களிடம் ஏற்கனவே டெங்கு காய்ச்சல் ஏற்பட்டிருக்கின்றதா என்பதை கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும். மேலும், தற்போது டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை சேமித்து வைத்துக் கொண்டு, மீண்டும் அவர்களுக்கு காய்ச்சல் வந்துள்ளதா என்பதை அவ்வப்போது தெரிந்துகொள்ள வேண்டும். கடந்த ஆண்டு டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் இருப்பின், அவர்கள் தற்போது மீண்டும் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

தமிழ்நாடு அரசு டெங்கு ஒழிப்பிற்காக போர்க்கால அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. மேலும், பொதுமக்கள் தங்கள் இடத்தினை சுத்தமாக பராமரித்தாலே போதும் டெங்கு நோயினை முற்றிலுமாக ஒழித்துவிட முடியும்.

ஏற்கனவே 1077 என்ற அவசரகால தொலைபேசி எண் உபயோகித்தில் உள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக 7094422501 என்ற Whatsapp செயலியுடன் கூடிய தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த புகார்களையும், டெங்கு காய்ச்சல் குறித்த சந்தேகங்கள் மற்றும் ஆலோசனைகளையும் இந்த எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். மேலும், இந்த எண்ணிற்கு டெங்கு காய்ச்சல் குறித்து வரப்பெறும் புகார்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நிலவேம்பு குடிநீர் மையத்தில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, திருக்கோவிலூர் சார் ஆட்சியர் திருமதி.சாருஸ்ரீ,இ.ஆ.ப., திண்டிவனம் சார் ஆட்சியர் செல்வி.மெர்சி ரம்யா,இ.ஆ.ப., பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.சு.இராஜேந்திரன் (விழுப்புரம்), திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இரா.குமரகுரு (உளுந்தூர்பேட்டை), திரு.எம்.சக்ரபாணி (வானூர்), திரு.அ.பிரபு (கள்ளக்குறிச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வி.மகேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அனுசுயாதேவி, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர்.வனிதாமணி மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.